காலை முரசு

பக்கங்கள்:-18

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 09 | வியாழக்கிழமை | 26.10.2023 | அதிர்வு 86

## இளம் குடும்பஸ்தர் சுட்டுப் படுகொலை



இளம் குடும் பஸ்தர் ஒருவர் சுட்டுப் படு கொலை செய்யப்பட் டுள்ளார்.

இந்தச் சம்பவம் காலி மாவட்டம், யக் கலமுல்லை 06

## மக்கள் கோரிய 'சிஸ்டம் சேஞ்ச' மிக விரைவில்

### அமைச்சர் மனுஷ உறுதி



மக்கள் எதிர்பார்க்கும் முறைமைகளில் மாற்றத்தை (Systems Change) ஏற்படுத்துவதற் காக தற்காலத்திற்கு ஏற்ற புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் 06

# எல்லாத் தமிழரையும் வெட்டிச் சாய்ப்பேன்!

### இனவாதம் கக்கி அட்டகாசம் போடும் தேரர்

- மட்டக்களப்பு நிருபர்கள் -

"அனைத்துத் தமிழர்களையும் வெட்டுவேன், என்ன செய்கிறார்கள் எனப் பார்ப்போம்."

- இவ்வாறு மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் தெரிவித்தார். 04






## விபத்துக்களில் மூவர் மரணம்!

இரு வேறு விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய - மொரகெட்டிய பிரதான வீதியில் இலுக்கெட்டிய பிரதேசத்தில் நேற்று அதிகாலை வீதியோரம் நடந்து சென்ற மூவர் மீது மோட்டார் வாகனம் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மூவரும் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட பின்னர் அதில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

58 மற்றும் 71 வயதுடைய 06

## மன்னாரில் மீனவர் ஒருவரை கட்டிவைத்து கொடூர தாக்குதல்

### வெளியான அதிர்ச்சி வீடியோ



- மன்னார் நிருபர் -

மன்னார், விடத்தல்தீவு கடற்பரப்பில் உள்ள கடற்றொழிலாளர் ஒருவரின் அட்டைப் பண்ணையில் இருந்து கடல் அட்டையைத் திருடினார் எனக் கூறி கடற்றொழிலாளர் ஒருவரைப் பிடித்துக் கட்டி வைத்து கொடூரமாகத் தாக்கும் காணொலி சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த திங் கட்கிழமை அதிகாலை இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளானவர் இலுப்பைக் கடவைப் பகுதியைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகின்றது.

சம்பவ தினத்தன்று அதிகாலை விடத்தல் தீவு கடற்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணையில் குறித்த 06

## புதிய பொலிஸ்மா அதிபரை உடனே நியமிக்க வேண்டும்

### ஜனாதிபதியிடம் மொட்டுக் கட்சி கோரிக்கை



புதிய பொலிஸ்மா அதிபரை விரைவில் நியமிக் குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பின்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன கட்சி யின் சார்பில் மேற்படி 06




இன்னும் இருபத் தியைந்து நாள்களில் மாவீரர் வாரம் வந்து விடும். பிறகென்ன, களத்திலும் புலத்தி லும் பரபரப்பும் பதற் றம் தொற்றிக் கொள் ளும்.

இப்போதே பிரமுகர் களின் பெயர்களைக் குறிப்பிட்டு, ஒன்று கூடவும், தீபமேற்றவும், கூட்டாக அஞ்சலிக் கவும் தடைவிதிக்குமாறு கோரும் விண் ணப்பங்களை நீதிவான் நீதிமன்றங்கள் தோறும் சமர்ப்பிக்கப் பொலிஸ் தரப்பு 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி கேட்டு ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதத் தீர்மானம்

இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தத் தேவையான நிதியை வழங்குவது தொடர்பான கோரிக்கையை ஜனாதிபதியின் செயலாளரிடம் முன்வைக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த விடயம் தொடர்பில் சிறிலங்கா அதிபரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கடிதமொன்றை ஒப்படைக்கவுள்ளார் என ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா நிதி அமைச்சு மற்றும் திறைசேரியிடம் இந்தக் கோரிக்கையை ஆணைக்குழு ஏற்கனவே முன்வைத்திருந்தாலும் அதற்கான பதில் இது வரை வழங்கப்படாத நிலையிலேயே, தேர்தல்கள் ஆணைக்குழு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த 2.2 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக சிறிலங்கா தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இது தொடர்பான கோரிக்கையை ஆணைக்குழு ஏற்கனவே சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் முன்வைத்திருந்தாலும், அதற்குப் பதிலளிக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் தவறியுள்ளனர் என ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கடிதமொன்றை ஒப்படைக்கவுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி இலங்கையில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்த ஆண்டில் மட்டும் 168 சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்குள்ளாகியுள்ளனர்

## பெண்கள், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தகவல்



இலங்கையில் இந்த ஆண்டின் செப்டம்பர் மாதம் வரையான காலப் பகுதிக்குள் 16 வயதுக்குட்பட்ட 168 சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனப் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள இராஜாங்க அமைச்சர், துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான 22 சிறுமிகள் தாய்மை அடைந்துள்ளனர் எனவும் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸாரை இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க கோரியுள்ளார்.

இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் அனைவரும் விழிப்புடன் இருக்குமாறும், இதுபோன்ற துஷ்பிரயோகங்களுக்கு இரையாகாமல் தமது குழந்தைகளைப் பாதுகாக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், குழந்தைகள் பெரும்பாலும் நெருங்கிய குடும்ப உறுப்பினர் அல்லது அவர்களது சொந்த வீட்டில் உள்ள ஒருவரால் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதிகரித்து வரும் இந்தப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்கள் ஜனாதிபதியுடன் நடத்தப்படவுள்ள நிலையில், பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

பொலிஸாரின் அலட்சியமும் இவ்வாறான சம்பவங்கள் அதிகரிப்பதற்கு ஒரு காரணம் எனக் கூறியுள்ள கீதா குமாரசிங்க, போதைப் பொருள்களின் அதிகரித்த பாவனையும் இவ்வாறான குற்றங்கள் இடம்பெறுவதற்கு ஒரு காரணமாக அமைவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் தாம் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பிற்கு பொறுப்புக்கூறும் அதே வேளையில், இலங்கையின் ஒட்டுமொத்த சமூகமும் அத்தகைய பொறுப்பை ஏற்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொடர் தொழிற்சங்க நடவடிக்கை




வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் வைத்திய அதிகாரிகளை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொடர் தொழிற்சங்க நடவடிக்கையை அறிவித்துள்ளது.

மூளைசாலிகள் வெளியேற்றம் பற்றிய அழுத்தமான பிரச்சினை தொடர்பில் சுகாதார அமைச்சகம் பாராமுகம் காட்டுவதாக அந்தச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த நிலையில், நவம்பர் முதலாம் திகதி முதல் மறு அறிவிப்பு வரும் வரை, முக்கியஸ்தர்களின் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடமாடும் அம்புலன்ஸ் சேவைகளில் இருந்து விலக சங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும்,மறு அறிவிப்பு வரும்வரை வைத்தியசாலை கடமைகளுக்கு வெளியே திட்டமிடப்பட்ட நடமாடும் வைத்திய முகாம் உட்பட அதனுடன் தொடர்புடைய பிற கடமை நடவடிக்கைகளில் இருந்து விலகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

அத்துடன் நவம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் மாகாண அளவிலான தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடங்கப் போவதாகவும் சங்கம் எச்சரித்துள்ளது.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

# 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk

# கல்லடிப் பாலத்திற்கு அருகில் நேற்று மாலை தீப்பந்தங்கள் ஏந்தி கவனவீர்ப்புப் போராட்டம்



மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் நேற்று மாலை மக்கள் கைகளில் தீப்பந்தங்கள் ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணத்தை குறைக்குமாறும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டு மக்களைப் பாது காக்குமாறும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

கைகளில் தீப்பந்தங்களை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி நாடு முழுவதும் நேற்றுப் புதன்கிழமை மாத் திரம் 12 இடங்களில் தொடர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தி ருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





## எல்லாத் தமிழரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட இருதயபுரம் பகுதிக்கு நேற்று மாலை சென்ற அம்பிட்டிய சுமன ரத்ன தேரர், தமி ழர்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்டோரை எச்சரிக்கும் வகையில் கடும் தொனியில் கத்தி கூச்சலிட்டதன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள சிங்கள மயானத்தில் வீடு உடைத்த கழிவுப் பொருட்கள் போடப்பட்டுள்ள நிலை யில் அங்கு வந்த அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் அதற்கு எதிராகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் பேசி னார்.

இதன்போது அப் பகுதிக்கு வந்த பொலிஸார் அவரைச் சமாதானப்ப டுத்தி அவர் அங்கிருந்து செல்வதற் கான ஏற்பாடுகளைச் செய்தனர். எனி னும், தேரர் கத்திக் கூச்சலிட்டார்.

இதன்போது, “பொலிஸார் இந்த வீதியை மூடினார்கள், பிரச்சினை ஏற் படுத்தினார்கள், இறுதியில் எமக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்தனர். இவர்களின் இந்தச் செயற்பாடு சரியா னதா? இவ்வாறு செய்ய வேண்டாம். நாம் உதவியற்றவர்கள். இனம் என்ற ரீதி யில், இங்கு இடம்பெறும் குற்றங்களைத் தடுக்க வேண்டும். நாட்டில் இனவாதம் இல்லை, மதவாதமும் இல்லை. இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் மிகவும் அமைதியாக வாழ்கின்றனர். சாணக்கியன் மற்றும் இங்குள்ள அதிகாரிகள் மேற்கொள்ளும் கீழ்த்தரமான நடவடிக்கைகளால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும். அவ்வாறு யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க முடியாது” – என்று அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் கடும் தொனியில் கத்திக் கூச்சலிட்டமை அந் தப் பகுதியில் பதற்றமான நிலையைத் தோற்றுவித்திருந்தது.

“அந்தப் பகுதியில் இரண்டு தினங் களுக்கு முன்பாக கட்டட இடிபாடுகள் கொட்டப்பட்ட நிலையில் அவற்றை அங்கி ருந்து அகற்றுவதற்கான நடவடிக் கையை எடுப்பதாகச் சுமன ரத்ன தேரரிடம் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந் தேன். எனினும், அவர் நேற்று அங்கு சென்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்” – என்று மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தக் கட்டட இடிபாடுகளை அகற்றி அப்பகுதியைத் தூய்மைப்படுத்துவதற் கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன என்றும் மாநகர சபை ஆணையாளர் குறிப்பிட்டார்.

நேற்று இரண்டு ஓட்டோக்களில் அந்தப் பகுதிக்குச் சென்ற அம்பிட்டிய சுமன ரத்ன தேரரும், அவருடைய சகாக்களும் அந்தப் பகுதி மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்ததுடன் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலும் கூச்சலிட் டனர்.

# ஹரே கிருஷ்ணா கல்லூரியின் வருடாந்த கலை விழா நிகழ்வு








ஹரே கிருஷ்ணா இசை நாட்டிய கல்லூரியின் வருடாந்த கலை விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை மருதானை எல்பிஸ்டன் அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர்கள் இசை, நடன, மிருதங்க கலைத் திறமைகளை மிக நேர்த்தியாக வெளிக்காட்டினர்.

விழாவில் பிரதம அதிதியாக பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டே பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழில் சங்க ரீதியாக தீர்வுக்கான மூவர் கொண்ட குழுவின் உறுப்பினரும் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார், வழக்கறிஞர் நடராஜா காண்டீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், சர்வதேச கிருஷ்ண பக்தி கழக இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமான் மஹாகரத்ததாஸ், இசை நாட்டியக் கல்லூரியின் அதிபர் ஸ்ரீமத் நந்த ராணி தேவி இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# நீதிமன்ற வளாகத்தினுள் பெண் மீது கத்திக்குத்து

ஹோமாகம நீதவான் நீதிமன்றில் நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணைக்குச் சென்ற பெண்ணொருவரின் கழுத்தை கூரிய ஆயுதத்தால் அறுத்துவிட்டுத் தப்பி ஓடிய நபரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஹோமாகம தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த பெண் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் அவரது நிலைமை மோசமாக இல்லை எனவும் ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார்.

தனது வீட்டில் இருந்து ஐந்து பவுண் தங்க நகைகளைக் காணவில்லை எனத் தனது சகோதரன் சந்தேகிக்கிறார் என இந்தப் பெண் பாதுக்க பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் அப்பெண் ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு ஆஜராக வந்துள்ளார்.

வீட்டுக்குச் செல்வதற்காக நீதிமன்றத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறிச் செல்ல முற்பட்ட போது ஓட்டோவில்



வந்த நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் கழுத்தில் சரமாரியாக தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பூகொட பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடைய பெண்ணே இவ்வாறு காய மடைந்துள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இப்போதே ஆயத்தமாகிவிடும்.

எத்தனை வழக்குகள் போட்டாலும், எத்தனை தடைவைகள் கொழும்பில் பயங்கரவாதத் தடைப் பிரிவுக்கு விசாரணைக்கென அழைத்தாலும், அவற்றைப் பற்றி எண்ணிக் கலங்காமல், பறந்து பறந்து, பரபரத்து, ஒவ்வொரு இடங்களாக ஓடி ஓடி, தடுக்கத் தடுக்கத் தீபமேற்றி அஞ்சலிக்கும் நம் 'பயர் பிராண்ட்' தலைவர் சிவாஜிலிங்கம் போன்றோரும் இம்முறையும் மாவீரர்களை அஞ்சலிக்க வரிந்து கட்டிக் கொண்டு தயாராகி விடுவர். 'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும்' என்ற மாதிரி எத்தனை தடைகள் வந்தாலும் மாவீரர்களை அஞ்சலிப்போம் என்ற சிவாஜிலிங்கம் போன்ற சிந்தனையுடையவர்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றமையினால் இம்முறையும் தடைகள் போடப்படுமானால் அவற்றையும் மீறி அஞ்சலிக்கும் நிகழ்வுகள் நடந்தே தீரும்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் உணர்வு பூர்வ நிகழ்வுகள் இம்முறையும் இடம் பெறும்.

இவ்வளவும் களத்தில். ஆனால் புலத்தில் வழமையான போட்டோ போட்டி அஞ்சலி நிகழ்வுகளுக்கு மத்தியில் மற்றொரு புதிய விடயம் அரங்கேறும் என சில செய்திகள் கசிந்துள்ளன.

2008க்குப் பின்னர் மாவீரர் தின உரைகள் இடம் பெறவில்லை. எனினும் தலைவர் இருக்கிறார், துணைவியார் இருக்கின்றார், மகள் துவாரகா இருக்கின்றார் என்று புலத்தைக் கலக்கும் செய்திகள் மற்றும் தகவல்களுக்கு மத்தியில், இம்முறை மகள் ஆற்றும் மாவீரர் தின உரை இடம்பெறும் என்று ஒரு தரப்பில் செய்தி கசிய விடப்பட்டிருக்கின்றது. அது வெறும் ஒலி வடிவ உரையா அல்லது காணொலி வடிவமா என்பது தெரியவில்லை.

எது, எப்படியோ இம்முறை மாவீரர் தின நிகழ்வுகளை ஒட்டி புலத்தில் புது பரபரப்பும் சர்ச்சையும் தொற்றிக் கொள்ளப் போகின்றன என்பது மட்டும் நிச்சயம். தலைவரும், துணைவியாரும், மகளும் இருக்கின்றார்கள் என்ற செய்திகள் பரபரப்பாக வெளியாகி, பின்னர் நிலைமை சற்று அடங்கியிருந்தாலும், அதற்குப் பின்னர் வரப்போகும் முதல் மாவீரர் தின நிகழ்வு இது என்பதால் இதில் முக்கியத்துவம் இருக்கத்தான் செய்யும்.

## புதிய பொலிஸ்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொலிஸ்மா அதிபர் பதவி என்பது முக்கியத்துவம்மிக்கது. எனவே, அரசமைப்புப் பேரவைக்கு தமது யோசனையை முன்வைத்து, புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தலை ஒத்திவைப்பது போல் பொலிஸ்மா அதிபர் நியமனத்தையும் ஒத்திவைத்துக் கொண்டிருக்க முடியாது." – என்றார்.

அதேவேளை, வரவு – செலவுத் திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் ரோஹித அபேகுணவர்தன எம்.பி. முன்வைத்தார்.

## இளம் குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிரதேசத்தில் நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 26 வயதுடைய எம்.நவரத்ன என்பவரே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரின் வீட்டுக்கு ஓட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத இரண்டு நபர்கள், அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பியோடியுள்ளனர்.

சம்பவத்தில்படுகாயமடைந்தநவரத்ன, வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர், பாதாளக் குழுவினருடன் தொடர்புபட்டவர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## மக்கள் கோரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

"கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டுவர நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். வரலாற்றில் அதிகளவிலான சட்டவிதிமுறைகளை நிறைவேற்றும் காலமாக இக்கால கட்டத்தைக் குறிப்பிடலாம்.

நாட்டில் உள்ள முறைமையை மாற்ற வேண்டும் என்றே மக்கள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். எனவே, அந்த மாற்றத்தைக் கொண்டு வரவே காலங் கடந்த சட்டங்களுக்குப் பதிலாக இன்றைய காலத்திற்கு ஏற்ற வகையில், அதிகமான சட்ட விதிமுறைகளைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அதேபோன்று, அரசு மாறும்போது மாற்றம் அடையாத, ஆளும் கட்சிகள் மாறும்போது மாற்றமடையாத, நிலையான கொள்கைகளைத் தயாரிக்கும் பணிகளும் தற்போது இடம்பெறுகின்றன. அதன்படி, ஐந்தாண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு கொள்கை இன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு அனைத்துத் துறைகளுக்குமான கொள்கைகள் தயரிக்கப்பட்டு வருகின்றன.

எமது நாட்டில் நிதி ஒழுக்கத்தை உருவாக்கினால் மாத்திரமே சர்வதேச நாணய நிதியம் உட்பட வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நாடுகள் எமது நாட்டின் பொருளாதார மீட்சிக்கு உதவ முன்வருவார்கள். அதனாலேயே நாம் எமது நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்த வேண்டிய பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கம் தொடர்பிலான குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்களை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார். குறிப்பாக, முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப்பின் தலைமையில் அரசியல் கட்சிகளின் நிதி மற்றும் செலவுகள் தொடர்பிலான ஒரு ஆணைக்குழுவை நியமிக்கவும் எதிர்பார்த்துள்ளோம். எவ்வாறு அரசியல் கட்சிகள் செயற்பட வேண்டும் என்பதை இக்குழு ஆராயும். எதிர்காலத்தில் இக்குழுவுக்கு பொது மக்களும் தமது ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அதேபோன்று, தொழிலாளர் சட்டத்தை திருத்தவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தொழில் வாய்ப்பு சட்ட மூலம் என்ற வகையில் எதிர்காலத்தில் அதனை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இது பாரிய மாற்றங்களைக் கொண்டுவரும். ஏனென்றால், மனித வள முகாமைத்துவம் என்பது ஒரு நாட்டுக்கு மிகவும் முக்கியமானதாகும். இவ்வாறு அனைத்துத் துறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக வீழ்ச்சி கண்ட தொழில் முயற்சிகளை இனங்கண்டு அவற்றை மீண்டும் மீட்டெடுக்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். அதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டிய பணிகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம்.

மேலும், வெளிநாட்டில் பணிபுரிபவர்களின் மேம்பாடு, தொழில் பாதுகாப்பு உட்பட அவர்கள் நாட்டுக்கு வழங்கும் ஆதரவுக்காக, அவர்களுக்கு சலுகைகளையும் நிவாரணங்களையும் வழங்க பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம்." – என்றார்.

## விபத்துக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய மோட்டார் வாகனம் தப்பிச் சென்றுள்ளது.

இந்நிலையில், அந்த மோட்டார் வாகனத்தின் சாரதியைத் தேடி பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, நேற்றுக் காலை பமுனுகம, போபிட்டிய பிரதேசத்தில், ஜா – எலவில் இருந்து போபிட்டிய நோக்கிச் சென்ற லொறி ஒன்று வீதியைக் கடந்த பாதசாரி ஒருவர் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் வீதியில் பயணித்த 27 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## மன்னாரில் மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடற்றொழிலாளர் சென்று அட்டையைப் பிடித்தார் எனக் கூறி அவரை இருவர் கட்டி வைத்து கடுமையாகத் தாக்கி மன்னிப்புக் கேட்க வைத்து அதனைக் காணொலியாகப் பதிவு செய்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான கடற்றொழிலாளரின் நிலை என்னவென்று இதுவரை தெரியவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலுப்பைக் கடவைப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ள போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அதிகாரம் எதையும் செய்யும்

இலங்கை அரசியலில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ‘நரித் தந்திரசாலி’ என்று பெயர் எடுத்தவர். அவரின் அரசியல் பிதாமகரான ஜே.ஆர்ஜெயவர்தனாவின் ‘கிழட்டு நரி’ என்ற பட்டத்தை இப்போது தாமே சுவீகரித்துக் கொள்ளும் நிலையில் இருப்பவர்.

இலங்கையில் மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய தேசிய கட்சிகளில் ஒன்றின் தலைவராகக் கால் நூற்றாண்டுகளுக்கு மேல் இருந்த நிலையில், அவரது கட்சி கடந்த பொதுத் தேர்தலில் அடியோடு துடைத்தெறியப்பட்டது. இலங்கை நாடு முழுவதும் விழுந்த வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியல் மூலம் கிடைத்த ஒரேயோர் ஆசனம் மூலம் தட்டுத் தடுமாறி நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து, கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியுமாகிவிட்டவர்.

அவரது கஷ்ட காலம் அரசியலுக்குக் கற்றுக்குட்டியான - 15 வருட அரசியல் அனுபவம் கூட கொண்டிராத - நாமல் ராஜபக்ஷவிடம் அரசியல் அரிச்சுவடி படிக்க வேண்டிய இக்கட்டு நிலை அவருக்கு.

கூட்டணி அரசியல் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்கிக் கொள்ள வேண்டும் என்று மொட்டு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாடம் போதிக்க முயலுகின்றார்.

கூட்டணி அரசாங்கம் ஒன்றில் ஏதேனும் முக்கிய தீர்மானம் ஒன்று எடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும். ஆனால் அப்படிச் செய்யப்படவில்லை என்று குறிப்பிடும் நாமல் ராஜபக்ஷ, மூத்த தலைவரான ரணிலுக்கு இன்னோர் உதாரணத்தையும் சுட்டிக் காட்டுகின்றார். அது அவதானிக்கத் தக்கது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தின் போதும் இரண்டு தலைவர்களும் வெவ்வேறாகச் செயற்பட்டமையால்தான் நாடு வீழ்ச்சி அடைந்தது என்று அவர் சுட்டுவது சரியானதுதான்.

2015 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போதும், நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலின் போதும், மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றுபட்டு மக்கள் முன் வந்தமையால், வெற்றி பெற்றனர். ஒருவர் ஜனாதிபதியானார். மற்றவர் பிரதமரானார். ஆனால், இப்போது நாமல் ராஜபக்ஷ கூறுகின்றமையைப் போல கூட்டணி தர்மம் குறித்து இருவரும் விளங்கிக் கொள்ளாமல், அப்போதும் முரண்பட்டனர். அதனால் நல்லாட்சி அரசும் தலைவர்களும் மக்களினால் நிராகரிக்கப்படும் நிலைமை ஏற்பட்டது.

அத்தகைய சூழ்நிலை இப்போதைய கூட்டணிக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்று ரணிலுக்குக் கூட்டணி தர்மம் குறித்துப் போதிக்கின்றார் நாமல் ராஜபக்ஷ.

ஆனால் இதெல்லாம் புரியாதவர் அல்லர் ரணில். ஐம்பது ஆண்டுகள் வெற்றிகரமாக அரசியல் செய்து கொண்டிருப்பவர். இப்போது நிறைவேற்றதிகாரம் அவர் கையில். யாரும், எதுவும் செய்துவிட முடியாது என்ற அரசியல் திமிரில் இருக்கின்றார். இதைத்தான் முன்னர் நாமல் ராஜபக்ஷவின் தந்தையார் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரி போன்றவர்களும் செய்தனர்.

அதிகாரம் கைக்கு வந்தால் கூட்டணி தர்மம் எல்லாம் குப்பை கூடைக்குள் என்பதுதான் அரசியல் விதி. அதைத்தான் ரணில் செய்கின்றார். நாமல் எடுத்தியம்பும் நியாயம் அவர் காதில் விழப்போவதில்லை. அதிகாரம் எதையும் செய்யும்.

## இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்குத் தெரிவானார் பருத்தித்துறை பிரதேச செயலர்!



இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்குப் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவாகியுள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி, புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சிறி வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவன் ஆவார். 1999 ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் அரச நியமனத்தைப் பெற்ற இவர், 2002 ஆம் ஆண்டு உதவித் திட்டமிடல் பணிப்பாளராகப் பணிபுரிந்து 2003 ஆண்டு இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக நியமனம் பெற்றார்.

நானாட்டான் மற்றும் வவுனியா பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகப் பணிபுரிந்து பின் நெடுந்தீவு மற்றும் நல்லூர் பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளராகச் சேவையாற்றிய இவர், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலத்தின் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

வடமராட்சி வடக்கு பிரதேச மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும், இடர் நிலைகளைக் குறைப்பதற்காகவும் நேர்மையுடன் பாரபட்சமின்றி பொதுமக்களின் தேவைகளை நன்கறிந்து அதனை நிவர்த்தி செய்யும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக இவர் செயற்பட்டு வருகின்றார்.

கடந்த 2018 மற்றும் 2022 ஆண்டுகளில் தேசிய உற்பத்தித் திறன் போட்டிகளில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் தேசிய நிலையில் இரண்டாம் நிலையைப் பெற்றுக்கொள்வதற்கு இவர் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியிருந்தார். அத்துடன் பருத்தித்துறை பிரதேச செயலகம் இவரது சேவைக் காலத்தில் மேலும் பல மாவட்ட மற்றும் தேசிய விருதுகளைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மரம் விழுந்ததில் நசுங்கிய ஓட்டோ

### சாரதியும் பயணிகளும் அருந்தப்பு



கம்பளை அட்டபாகை தமிழ் கல்லூரியில் நடைபெற்ற பூஜைக்கு வந்த தாய் மற்றும் இரு பிள்ளைகளை ஏற்றிச் சென்ற ஓட்டோ மீது பெரிய மரம் ஒன்று வீழ்ந்ததில் ஓட்டோவுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

ஓட்டோவில் இருந்த தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் மற்றும் சாரதி இறங்கிய சில நிமிடங்களில் மரம் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது,

இதனையடுத்து, அப்பகுதி மக்கள் மற்றும் தோட்ட நிர்வாகத்தினர் மரத்தை அகற்றும் நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளனர்.

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாரண மாணவர்களுக்கு கௌரவம்

## மட்டக்களப்பில் திங்களன்று நிகழ்வு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த சாரண மாணவர்களுக்கு மட்டக்களப்பில் கே.கே.சண்முகம் அறக்கட்டளையால் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்குமிடையிலான 30 கிலோமீட்டர் கடலை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்டியுள்ள மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் மூன்று மாணவர்களுக்குமான வரவேற்பு மற்றும் கௌரவிப்பு கடந்த திங்கட்கிழமை இரவு மட்டக்களப்பு (சிங்கிங் பிஸ்) சுற்றுலா விடுதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கே.கே.சண்முகம் அறக்கட்டளையின் அனுசரணையில் அதன் ஸ்தாபகர் ச.சண்முகேசனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்வரவேற்பு கௌரவிப்பு நிகழ்வில், அரசியல்வாதிகளும், வர்த்தகப்பிரமுகர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகளும் நீச்சல் சாதனை புரிந்த மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் தமது வாழ்த்துக்களையும்




பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன்(பிள்ளையான்), நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம்(ஜனா), மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் அன்ரன் பெனடிக் யோசப், முன்னாள் அதிபர் பயஸ் ஆனந்தராஜா, மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் விவேகானந்த பிரதீபன், மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் எம்.செல்வராசா, மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் உப தலைவர் கலீல் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அத்துடன், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர், சாரண சங்கத்தினர், லயன்ஸ் கழகம், ரோட்டறி கழகம், லியோ கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்கு கொண்டனர்.

நிகழ்வின் வரவேற்புரையை மட்டக்களப்பு மாவட்ட சாரண




ஆணையாளர் விவேகானந்தராஜா பிரதீபன் நிகழ்த்தினார். தலைமையுரையை புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் அன்ரன் பெனடிக் யோசப்பும், தமது பிள்ளைகளின் சாதனைப் பயணம் குறித்த கருத்து மற்றும் நன்றியுரையைச்சிவ்சாதனை புரிந்த மாணவர்களின் தந்தையான புளோரிங்டனும் வழங்கினார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசியப் பாடசாலையின் சிரேஷ்ட சாரண மாணவர்களான புளோரிங்டன் டயன்ஸ்ரித், புளோரிங்டன் டயன் பிறிடோ மற்றும் இருதயநாதன் கெல்வின் கிசோ ஆகிய மூவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் ஆரம்பித்த தமது சாதனைப் பயணத்தினை முற்பகல் 10.30 மணியளவில் நிறைவு செய்திருந்தனர்.




கடலில் பிளாஸ்ரிக் பொருள்கள் கலப்பதைத்தடுக்கும் நோக்கிலான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நீச்சல் முயற்சி, புனித மிக்கேல் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்று வருகின்ற நிகழ்வுகளின் ஓர் அங்கமாகவும் அமைந்திருந்தது.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரும் ஜனாதிபதி விருது பெற்ற சிரேஷ்ட சாரணருமான




தவேந்திரன் மதுஷிகன் சில மாதங்களுக்கு முன்னர் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து ஏற்கனவே சாதனை படைத்துள்ள நிலையில் இம் மூன்று மாணவர்களும் இணைந்து மீண்டுமொருமுறை சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.




இம் மூன்று மாணவர்களுள், இருவர் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம் மாணவர்களது சாதனையைப் பாராட்டும் வகையில் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பாராட்டுக்கள் குவிந்த வண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆளுநர் மாளிகை முன்பு குண்டு வீச்சு: தமிழகத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்

## - அண்ணாமலை தெரிவிப்பு

ஆளுநர் மாளிகை முன்பு பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவத்தைப் பார்க்கும்போது, தமிழகத்தை இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் சிவகிரியில் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், ஆளுநர் மாளிகை வாசலில் பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவத்தின் மூலம், தமிழகத்தின் சட்டம் – ஒழுங்கு மிக மோசமாக உள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆளுநர் மாளிகை முன்பு பெட்ரோல் குண்டு வீசிய கருக்கா வினோத் என்ற நபர், சில மாதங்களுக்கு முன்பு கமலாலயத்தில் பெட்ரோல் குண்டு வீசியவர் ஆவார். தமிழகத்தில் உளவுத்துறை எந்த அளவிற்கு கோட்டை விடுகின்றது என்பதற்கு இது உதாரணம்.

கொடிக்கம்பம் நடுவதை தடுப் பதில், சமூக வலைத்தளங்களில் பணியாற்றுபவர்களைக் கைது செய்வதில் முனைப்பு காட்டும் பொலிஸ், இதுபோல் தொடர் குற்றச் செயலில் ஈடுபவரை கண்காணிப்பதில்லை.

இனிமேல், அரசையும் பொலிஸையும் நம்பி பிரயோசனம் இல்லை. தமிழக மக்கள் ஆண்டவனை தான் வேண்டிக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இனியாவது போலிஸ்க்கு அதிகாரத்தை கொடுத்து இது போன்ற குற்றச்சம்பங்களை தடுப்பாரா?

தி.மு.க. நிர்வாகிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொலிஸாரை விடுவித்து, ஒரு சாமானிய மனிதனினுக்கு நம்பிக்கையும் மரியாதையும் வரும் அளவிற்கு நடத்த வேண்டும் என்பது நமது எதிர்பார்ப்பாகும்.

உச்சபட்ச அதிகாரம் உள்ள ஆளுநர் மாளிகையின் முன்பாக இதுபோன்ற சம்பவம் நடைபெறுகிறது என்றால், சாதாரண மக்களுக்கும் பெண்களுக்க



என்ன பாதுகாப்பு இருக்கும் என்பது தான் கேள்வி.

ஒரு தொடர் குற்றவாளியை உளவுத் துறையால் கண்காணித்து, பாதுகாப்பு வழங்க முடியவில்லை என்றால் சிறு நகரங்கள் கிராமங்களில் எவ்வாறு பாதுகாப்பு வழங்குவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# சென்னை ஆளுநர் மாளிகைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை!




தமிழக ஆளுநர் மாளிகையின் நுழைவு வாயில் முன்பு நேற்று பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதனால், ஆளுநர் மாளிகைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று சென்னை தெற்கு மேலதிக பொலிஸ் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்.

சென்னை வேப்பேரியில் உள்ள பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது பொலிஸ் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா மேலும் தெரிவிக்கையில், அடையாளம் தெரியாத நபர் ஒருவர், ராஜ்பவன் நுழைவு வாயில் பகுதியை குறிவைத்து, பெட்ரோல் நிரப்பிய போத்தலை வீசுவதற்கு முயற்சித்தார்.

அப்போது அங்கு முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அந்த நபரை பார்த்துவிட்டதால், அவர் எதிர் திசையில் உள்ள ஹைவே ரிஸர்ச் சென்டர் என்ற பகுதியில் இருந்து அந்த போத்தலை வீச முயற்சித்தார். அப்போது பிரதான நுழைவு வாயில் பகுதியிலும், வெளியிலும் இருந்த பொலிஸார் அந்த நபரை சுற்றி வளைத்தனர்.

அந்த நபரை போலீசார் பிடித்தபோது, ஒரு போத்தலை வீசினார். அதிலிருந்து எந்தவிதமான தீயும் வரவில்லை. அவரை பிடித்தபோது, மேலும் 4 போத்தல்கள் அவரிடம் இருந்தன. அதனை பொலிஸார் பறிமுதல் செய்துவிட்டனர். இதனால் ஆளுநர் மாளிகையில் யாரும் பாதிக்கப்படவில்லை. எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை.

அந்த நபரை பிடித்து பொலிஸார் விசாரித்தபோது, அவர், 42 வயதுடைய கருக்கா வினோத் என்பது தெரியவந்தது. தேனாம்பேட்டையைச் சேர்ந்தவர். இவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இதே மாதிரி, ஒரு அரசியல் கட்சி அலுவலகத்தின் மீது, இதேபோன்ற போத்தலை வீசியுள்ளார். அதற்கு முன்னதாக, தேனாம்பேட்டை பொலிஸ் நிலையத்தில் இதே போன்ற செயலில் ஈடுபட்டுள்ளார்.

அண்மையில் சிறையில் இருந்து பிணையில் வெளியே வந்திருக்கிறார். அவர் மது அருந்தியுள்ளார். சம்பவத்தின் போது அவர் நிதானத்தில் இல்லை. பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து அவரிடம் விசாரணை நடத்தி வருகிறோம். இந்த விசாரணைக்குப் பின்னர், முழு விவரம் தெரியவரும் என்று தெரிவித்துள்ளார்.

# மருந்து, பணியாளர்கள் பற்றாக்குறை: காசாவில் சுகாதார சேவைகள் முடக்கம்



காசா மீதான இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் தொடருகின்றது. இந்த நிலையில், அந்த நகரில் சுகாதார சேவைகள் முற்றிலும் முடங்கிப்போயுள் ளது என பாலஸ்தீனிய சுகாதார அமைச் சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் வைத்தியர் அஷ்ரஃப் அல்-குத்ரா கருத்து தெரிவிக்கையில்,

அடுத்தடுத்த தாக்குதல்கள், மருத்துவ பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் மருந்துகள் பற்றாக்குறை காரணமாக காசாவில் மருத்துவ சேவைகள் முடக் கப்பட்டுள்ளது.

இதனால், கடந்த 24 மணி நேரத்தில் 344 குழந்தைகள் உட்பட 756 பேர் உயிரிழந்துள்ளனர். அவசர உதவிகளை கோரி வருகிறோம். ஆனால், சர்வதேச நாடுகள் எங்கள் கோரிக்கையை கண்டு கொள்ளவில்லை என்று தெரிவித் துள்ளார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் மீண்டும் ஏவுகணை தாக்குதலை நடத்தியுள்ளது என உறுதியாகியுள்ளது. காசாவில் இருந்து 220 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தெற்கு இஸ்ரேலிய துறைமுக நகரமான ஈலாட்டை நோக்கி ஏவுக ணைகள் ஏவப்பட்டுள்ளன என ஹமாஸ் தெரிவித்துள்ளது. இதை உறுதிப் படுத்தியுள்ள இஸ்ரேல் இராணுவம், ஏவுகணை திறந்தவெளியில் விழுந் துள்ளது என தெரிவித்துள்ளது.

ஆனால், ஒக்டோபர் 7 ஆம் திகதிக்கு பின்னர், ஹமாஸ் செலுத்திய மிக நீண்ட தூர ஏவுகணை தாக்குதல் இது என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் உயிரிழப்புகள் குறித்து எந்த தகவலும் இதுவரை இல்லை.

இதேவேளை, ஹமாஸ் தீவிரவாத அமைப்பு அல்ல, அது ஒரு விடுதலைக் குழு என துருக்கி ஜனாதிபதி தையிப் எர்டோகன் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பேசிய எர்டோகன், பாலஸ்தீன இராணுவ குழுவான ஹமாஸ் தீவிரவாத அமைப்பு அல்ல, அது ஒரு விடுதலைக் குழு. பாலஸ்தீன நிலங்களையும் மக்களையும் பாதுகாக்க அந்த விடுதலைக் குழு போரை நடத்து கிறது.

ஆனால், இஸ்ரேல் ஒரு நாட்டை போல் செயல்படாமல், தீவிரவாத குழு போல் நடக்கிறது. தற்காப்பு செயல்பாடு என்கிற பெயரில் காசா மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்துகிறது.

மனிதாபிமானத்துக்கு எதிராக இஸ்ரேல் குற்றம் புரிகிறது. இஸ்ரேல் உடனடியாக இந்த காட்டுமிராண்டித்தை நிறுத்த வேண்டும். உலக நாடுகள் இஸ்ரேலின் இந்த காட்டுமிராண்டித்தை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இஸ்ரேலுக்காக மேற்குலக நாடுகள் கண்ணீர் சிந்துவது மோசடியின் வெளிப் பாடு. மத்திய கிழக்கில் அமைதியை உறுதிப்படுத்த இஸ்லாமிய நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, சிரியாவின் அலெப்போ விமான நிலையத்தை குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தி யுள்ளது.

இத்தாக்குதலை சிரிய அரசு தொலைக்காட்சி உறுதிப்படுத்தியுள்ளது. தாக்குதலை அடுத்து அலெப்போ விமான நிலைய செயல்பாடுகள் தற்போது முடக்கப்பட்டுள்ளன.

ஆனால், இஸ்ரேலிடம் இருந்து இந்த தாக்குதல் தொடர்பாக எந்தவித தகவலும் இதுவரை வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காசா மீதான இஸ்ரேலின் இரவு நேர தாக்குதல்கள்!

## - 80 பேர் உயிரிழப்பு



காசா மீது இஸ்ரேல் நடத்திய இரவு நேர வான்வழித் தாக்குதல்களில் 80 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஹமாஸ் தரப்பில் வெளியிட்ட தகவலில், நேற்று முன் தினம் ஒரே இரவில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 80 இற்கும் மேற்பட் டோர் உயிரிழந்திருக்கின்றனர்.

நூற்றுக்கணக்கானோர் காயம டைந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இதேவேளை, கடந்த திங்கள் கிழமை காசா மீது இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதல்களில் 140 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர் என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1,400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்திருந்தது.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே நீண்ட காலமாக எல்லைப் பிரச்சினை நிலவி வருகிறது. பாலஸ்தீனத்தின் காசா பகுதி கடந்த 2007 ஆம் ஆண்டு ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் வந்தது. அப்போதிருந்து இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே பல மோதல்கள் இடம்பெற்றுள்ளன. காசா எல்லையில் ஹமாஸ் அமைப்பினரும், இஸ்ரேல் இராணுவம் மோதிக் கொள்ளும் சம்பவம் அடிக்கடி நடைபெறும். இந்த நிலையில், கடந்த 7 ஆம் திகதி தொடங்கிய காசா - இஸ்ரேல் மோதல் தொடர்ந்தும் நீடித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# கல்லூண்டாய்வெளி குடியிருப்புத்திட்ட மக்களுக்கு காணிப் பத்திரம் கையளிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்லூண்டாய் வெளி குடியிருப்புத்திட்ட மக்களுக்கான காணி உரிமைப் பத்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் இடம் பெற்றது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகத்தில் நவாலி கிழக்கு மற்றும் மேற்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 54 குடும்பங்களுக்கான காணி உரிமைப் பத்திரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தவால் கையளிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன், காணி மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகன், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயந்தன் குணதிலக மற்றும் துறைசார் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.















# சீனாவின் 'ஷி யான் 6' ஆய்வுக் கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது!

சீன ஆய்வுக் கப்பல் நேற்று இலங்கை கடற்பரப்பிற்குள் வருகை தந்தது.

"ஷி யான் 6" எனும் சீனாவின் ஆய்வுக் கப்பல், ஒரு மாத காலத்திற்கும் மேலாக இந்து சமுத்திரத்தில் இருந்தது.

இந்த நிலையில், நேற்று கொழும்பு துறைமுகத்தை அது வந்தடைந்தது. தற்போது அது கொழும்புத் துறைமுகத்தின் எஸ்.ஏ. முனையத்தில் நங்கூரமிட்டுள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி குவென்ஷோ துறைமுகத்திலிருந்து புறப்பட்ட சீன ஆய்வுக் கப்பல் , கடந்த மாதம் 19 ஆம் திகதி இந்து சமுத்திரத்திற்குள் பிரவேசித்தது.

இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலமான ழேைநெவல நுயளவ சுனைபந என அடையாளப்படுத்தப்படும் கடலின் முகடு வழியாகவும், பின்னர் இந்து சமுத்திரத்தின் பல பகுதிகளுக்கும் சீன ஆய்வுக் கப்பல் பயணித்தது.

இந்தியா தீவிர கவனம் செலுத்தியதால், கப்பல் பயணத்தின் ஆரம்பம் முதல் பல சர்ச்சைகள் ஏற்பட்டன.

கப்பலின் இலங்கைக்கான பயணம் ஒக்டோபர் 25 ஆம் திகதி இடம்பெறும் என கடந்த ஓகஸ்ட் மாதம் சீனாவிலிருந்து கப்பல் புறப்படுவதற்கு முன்னரே கடற்படையினர் அறிவித்திருந்தனர்.

எனினும், உயர்மட்ட இராஜதந்திரிகளுக்கு இந்தியா வழங்கிய பதில் நடவடிக்கைகளால், சீன ஆராய்ச்சிக் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருவது தாமதமானது.

இதேவேளை, சீனக் கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கடந்த மாதம் 25 ஆம் திகதி நியூயோர்க்கில் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், திட்டமிட்ட தினத்திலேயே "ஷி யான் 6" எனும் இந்த சீனாவின் ஆய்வுக் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளது.

பொருள்கள் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக சீன கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, "ஷி யான் 6" கப்பலுக்குள் பிரவேசிப்பதற்கு, தமது நான்கு பிரதிநிதிகளுக்கு வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என நாரா (NARA) நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும், அவர்களுக்கான திகதி நேற்று பிற்பகல் 2 மணி கடந்தும் வழங்கப்படவில்லை.


"ஷி யான் 6" கப்பலுடன் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ருஹுணு பல்கலைக்கழகமே ஒப்பந்தம் செய்துள்ளது என நாரா நிறுவனம் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தது.

நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு அந்த ஆய்வு நடவடிக்கைகளில் இருந்து விலகுகிறோம் என ருஹுணு பல்கலைக்கழகம் அறிவித்தது.

28 அறிவியல் ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளும் 13 ஆய்வுக் குழுக்களுடன் இந்த கப்பல் 80 நாள்கள் கடலில் பயணிக்கும் என சீனா கூறியுள்ளது.

இதன்போது, 12,000 கடல் மைல்களுக்கும் மேற்பட்ட பகுதிகள் ஆய்வுக் குட்படுத்தப்படவுள்ளன.

# மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டத்தை சமனல வெவவில் அமைக்க அனுமதி



சமனல வெவ நீர்த் தேக்கத்தில் மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டத்தை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் 200 மெகாவாட் மின் உற்பத்தி எதிர்பார்க்கப் படுகிறது.

# அருவாக்காட்டில் தேங்கியுள்ள கழிவு நீரை புத்தளம் கடல் நீர் ஏரிக்கு வெளியேற்றாதீர்!

## அப்பகுதி மக்கள் அமைதிப் போராட்டம்; ஆளுநருடனும் பேச்சு









**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் அருவாக்காடு கழிவு முகாமைத்துவ திட்டத்தில் உள்ள கழிவு நீரை புத்தளம் கடல் நீர் ஏரிக்கு வெளியேற்ற வேண்டாம் எனத் தெரிவித்து மக்கள் நேற்று முன்தினம் அருவாக்காட்டுக்குச் செல்லும் வீதியில் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை போடுவதற்காக வண்ணாத்திவில்லு அருவாக்காடு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த கழிவு முகாமைத்துவ திட்டம் கைவிடப்பட்ட நிலையில் அண்மையில் பெய்த மழை காரணமாக அங்கு கழிவு நீர் தேங்கி காணப்படுகின்றது.

இந்த கழிவு நீரை சேரக்குளிப் பிரதேசத்தில் உள்ள சிறுகடலுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைப் பார்வையிடுவதற்காக வடமேல் மாகாண ஆளுநர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் உள்ளிட்ட அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் அந்தப் பிரதேசத்திற்குச் சென்றனர்.

இதன்போது அருவாக்காடு வீதியோரத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமேல் மாகாண ஆளுநரும், புத்தளம் மாவட்டச் செயலாளரும் மற்றும் அதிகாரிகளும் அருவாக்காடு கழிவு முகாமைத்துவத் திட்டத்தை பார்வையிட்டு மீண்டும் வருகை தந்து அருவாக்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஊழியர்கள் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அங்கு பலரும் இத்திட்டம் தொடர்பாக ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

பின்னர் ஆளுநர் அதிகாரிகளிடம் இது தொடர்பாக அறிக்கை சமர்பிக்குமாறும் மக்களுக்கு எவ்வித தீங்கும் இடம்பெறாத வகையில் இத்திட்டங்களை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

அதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களையும் ஆளுநர் நேரில் சந்தித்து கலந்தரையாடினார்.

# ஐஸ்கிரீம் வாகனச் சாரதியின் தூக்கத்தால் நேர்ந்த விபத்து

## கணவனும் மனைவியும் காயம்;பிள்ளை தப்பியது

ஐஸ்கிரீம் விற்பனை செய்யும் சிறியரக லொறியொன்று விபத்துக்குள்ளானதில் கணவனும் மனைவியும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய இரண்டரை வயது குழந்தை எவ்வித மான காயங்களும் இன்றி தெய்வாதீனமாக தப்பியுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெலிப்பன்னையில் இருந்து சுமார் 53 கிலோ மீற்றர் தூரத்தில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக குருதுகஹ ஹடேகம அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வொன்றில் ஐஸ்கிரீம் விற்பனை செய்துவிட்டு கடவத்தை நுழைவாயிலில் இருந்து அம்பலாந்தோட்டைக்கு சென்ற சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலகத்தால் விபத்து நேர்ந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

லொறி வீதியின் இடது பக்கமாக இழுத்துச் சென்று பாதுகாப்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளானதில் வாகனத்தின் முன் இடது பக்கத்தில் அமர்ந்திருந்த சாரதியின் மனைவி மற்றும் சிறு குழந்தை ஆகியோர் வாகனத்திலிருந்து தூக்கி வீசப்பட்டுள்ளனர். அதன் பின்னர் லொறி கவிழ்ந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# கடன் மறுசீரமைப்பு ஒழுங்குகளில் வெளிப்படைத்தன்மை கட்டாயம்

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தல்

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் பங்கேற்கும் சகல தரப்பினரும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சங் வலியுறுத்தியுள்ளார்.



இலங்கை மத்திய வங்கி ஆளுநரை நேற்று முற்பகல் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடன் வழங்குநர்கள் அனைவரும் சமமாகவும் நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும் என அமெரிக்க தூதுவர் மத்திய வங்கி ஆளுநரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனூடாக, கடன் மறுசீரமைப்பு செயன்முறையைநியாயமானமுறையில் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெறுவதற்கு ஊழியர் மட்ட இணைக்கப்பாட்டை எட்ட முடிந்தமைக்காக மத்திய வங்கியின் ஆளுநருக்கு அமெரிக்கத் தூதுவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.



# கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி உள்ள பிரதேசத்தில் சி.சி.டி.வி. கமராக்கள் அமைப்பு

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி உள்ள இடத்தில் சி.சி.டி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ, குறித்த இடத்திற்கு பாதுகாப்பு வழங்குமாறு மாவட்ட செயலகத்திடம் விடுத்த கோரிக்கையை அடுத்து இவ்வாறு சி.சி.டி.வி. கமராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மனித புதைகுழி என சந்தேகிக்கப்படும் இடத்தில் அகழ்வாராய்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஒரு வாரத்தில் மீண்டும் அகழ்வுப் பணிகள் தொடங்கும் – என்று வைத்தியர் கனகசபாபதி வாசுதேவ கூறியுள்ளார்.

இந்த இடத்தில் கடந்த செப்டம்பர் 15ஆம் திகதிவரை அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஒன்பது நாள்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், பதினேழு எலும்புக் கூடுகள் இங்கு தோண்டி எடுக்கப்பட்டிருந்தன.

அதுவரை கிடைத்த ஆதாரங்களை ஆய்வு செய்ய ஓர் இடைவெளி தேவை என்று தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா கூறியிருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

# வடக்கு மீனவர்களைக் காப்பாற்றுங்கள் என ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் கோரிக்கை!




வட மாகாண மீனவர்களை அழிவில் இருந்து காப்பாற்றுங்கள் என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த வட மாகாண கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா இவ்வாறு கோரிக்கை விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிக்கு ஊடகங்கள் வாயிலாக வடக்கு மீனவர் சமூகம் சார்பில் முன்வைக்கும் கோரிக்கை இது.

எங்களுடைய கடற்றொழில் அமைச்சர் கடந்த வாரம் உங்களை சந்தித்து இந்திய இழுவைப்படகுகளால் வடக்கு கடற்றொழில் சமூகம் பாதிக்கப் படுகிறது. அதனை தடுத்து நிறுத்த இந்திய மீனவர் பிரச்சினையில் ஐ.நா. தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என மனு அளித்துள்ளார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால், வடக்கிலே அமைக்கப்படும் கடலட்டை பண்ணைகள், தடைசெய்யப்பட்ட உள்ளூர் தொழில்முறைகள் என்பவற்றால் வடக்கு மாகாண கடல் வளம் அழிக்கப்பட்டு கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரமும் நாசமாக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களைக் கொண்டு உள்ளூரில் தடைசெய்யப்பட்ட தொழில்களை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காது, இவற்றை மூடிமறைக்கவே இந்திய மீனவர்களது பிரச்சினையை மட்டும் பூதாகரப்படுத்தி வருகின்றனர்.

நாங்கள் உங்களை சந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றோம். நீங்களும் எங்களைச் சந்திக்கும் நிலையும் இதுவரை இல்லை. ஆகவே ஊடகங்கள் வாயிலாக நாங்கள் உங்களிடம் இந்த விடயங்களை முன்வைக்கின்றோம்.

முக்கியமாக யாழ் மாவட்டத்தில் கடற்றொழில் அமைச்சினால் சட்டவிரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எங்களுடைய பாரம்பரிய கடற்றொழிலாளர்களையும் எங்களது இருப்பையும் அழிக்கும் வேலையை சீனாவோடு இணைந்து கடற்றொழில் அமைச்சர் செய்து வருகின்றார்.

நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட 2017 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க உள்ளூர் இழுவைமடி சட்டம் புத்தளத்தில் நடைமுறையில் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் இல்லை. இதற்கு கடற்றொழில் அமைச்சும், அமைச்சருமே காரணம்.

உள்ளூரிலே தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கைகளைத் தடை செய்து உள்ளூர்ச் சட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள் என்று கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்துங்கள்.

உள்ளூரிலே கடற்றொழிலாளர்கள் நாங்கள் நெருக்கப்பட்டு நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இந்தக் கடற்றொழில் திணைக்களத்தினாலும் பணிப்பாளர் நாயகத்தினாலும் கடற்றொழில் அமைச்சினாலும் ஏறபடுத்தப்பட்டு வரும் நெருக்குதல்களில் இருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்பதும், எங்களது கடலில் நாங்கள் சுதந்திரமாக மீன்பிடித்து ஆளுமையுடன் வாழ்வதற்கு ஒரு வழியை ஏற்படுத்தும் வகையில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியாகிய நீங்கள் கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்த வேண்டும் என்பதும் வடக்கு மாகாண மீனவர்களாகிய எங்களது எதிர்பார்ப்பாக உள்ளது.

நீங்கள் வடக்கு மாகாணத்திற்கு வரும்போது கடற்றொழிலாளர்களது பிரச்சினைகளை நேரில் சந்தித்து கேட்டறிந்து கொள்ளும் சந்தரப்பத்தை கட்சி சார்ந்தவர்கள் தவிர்த்து உண்மையான வடக்கு மாகாண மீனவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதனையும் வடக்கு மாகாண மீனவர்கள் சார்பில் தயவாக கோரிநிற்கின்றோம்.– என்று தெரிவித்தார்.

# இரவு வேளைகளில் பெண்களும் அலுவலகப் பணியாற்ற அனுமதி

## அமைச்சரவை வழங்கியது

தகவல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள், அறிவுச் செயன்முறையை வெளியிலிருந்து வழங்கும் நிறுவனங்கள், வியாபாரச் செயன்மறையை வெளியிலிருந்து நிறுவனங்கள் மற்றும் வேறு நாடுகளில் அமைந்துள்ள வியாபார நிறுவனங்களுக்கான கணக்கு, நிர்வாகம் மற்றும் தொழிநுட்ப நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அலுவலகங்களில் பணி புரிகின்ற பெண்களுக்கு இரவு வேளைகளில் பணியாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கான இயலுமை கிட்டும் வகையில் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை காரியாலய ஊழியர்கள் தொடர்பான (ஊழியர் மற்றும் வேதனங்கள் முறைப்படுத்தல்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2023.08.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள கடை காரியாலய ஊழியர்கள் தொடர்பான (ஊழியர் மற்றும் வேதனங்கள் முறைப்படுத்தல்) சட்டமூலத்திற்காக சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.10.2023




இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். நீங்கள் இதில் முழு ஆற்றலையும் செலுத்த வேண்டியிருக்கும். பொழுதுபோக்கிற்கென சிறிது நேரமே ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் இன்று அமைதியாக இருக்கவேண்டும்.

நீங்கள் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். மேலும் நீங்கள் பணிகளை கவனமாக கையாள வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் பேச்சில் கவனம் வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் கவனமற்ற வார்த்தைகளை நீங்கள் பேச வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள். இனிமையான வார்த்தைகள் மூலம் நீங்கள் பலனடைவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க சாத்தியமாகலாம். நீங்கள் உங்கள் மன உறுதியால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையான நம்பிக்கையான உறவு கொண்டிருப்பீர்கள். இன்று மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் சொத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. முக்கிய முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உங்களின் ஆற்றலை நீங்கள் சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும். இதனால் உங்கள் செயல்களை திறமையாக ஆற்றுவீர்கள். பொருத்தமான செயல்களை செய்து உங்கள் நிலையை மேம்படுத்துவீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்களுக்கு பல நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி பற்றிய ஆலோசனை நடத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். லாபம் தரும் முதலீட்டிற்கான பயனுள்ள திட்டங்களில் பங்கு கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் அமைதியை உணர்வீர்கள். கூடுதல் பொறுப்புகள் உங்களுக்கு கவலை அளிக்கும். இரவில் தூக்கமின்மை காணப்படும்.

நீங்கள் சிறந்த பலனைக் காண மிகக் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி பெற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த அனுபவம் திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்றைய தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாக காணப்படும்.




இன்று அதிருப்தியான நிலை காணப்படும். அனுசரணையான போக்கு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். சிறந்த பலன் காண உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிட வேண்டும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். பணியில் கவனமாக இருப்பதன் மூலம் தவறுகள் நேராமல் தவிர்க்கலாம். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாகப் பேச வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். பல வாய்ப்புகள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

நீங்கள் பொறுப்புடனும் சிரத்தையுடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். கடினமான பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். மொத்தத்தில் உங்கள் செயல்திறனில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாகவும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதுமானதாகவும் இருக்கும். உங்களால் சேமிப்பு நிலையை உயர்த்த இயலும்.




இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது. இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கூடுதல் பணிகள் காரணமாக திட்டமிட்டபடி பணிகளை செய்வது கடினமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்களுக்கு கூடுதல் செலவுகள் ஏற்படும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.10.2023




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள். நற்பலன்கள் காண எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று சிறந்த பலன் அளிக்காது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகள் சலிப்பூட்டுவதாக இருக்கும். நீங்கள் சிறந்த பணி மாற்றம் விரும்புவீர்கள். அது இன்று சாத்தியமில்லை.

கடுமையான வார்த்தைகள் மற்றும் செயல்கள் உங்கள் துணையின் மனதில் காயத்தை ஏற்படுத்தும். இதனால் உறவின் ஸ்திரத்தன்மை பாதிக்கும்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கூடுதல் சுமையாக இருக்கும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக உங்களுக்கு வளர்ச்சி அளிக்கும் சில மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

பணியிடத்தில் வெற்றிகள் அதிக அளவில் காணப்படாது. இதனால் பணிகள் தேங்கிக் கிடைக்கும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கலாம்.

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. சிக்கனம் கடைப்பிடிக்க வேண்டும்.




இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய இலக்குகளை அடைய திட்டமிடலாம். நீங்கள் எதிர்பார்த்ததை விட இன்று அதிகம் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் அதிக வாய்ப்புகள் காணப்படும். நீங்கள் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த அமைதியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இன்றைய நாள் இனிமையாக சிறப்பாக இருக்கும்.

உங்களின் சேமிப்பு ஆற்றல் சிறந்த முறையில் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீடுகளில் நீங்கள் பங்கு பெறலாம்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும். நீங்கள் சில தடைகளை சந்திப்பீர்கள். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். சிறந்த வளர்ச்சி காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் மேலதிகாரியுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதிகப் பணிகளால் மகிழ்ச்சி குறையும். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை சிலவற்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்துள்ள பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த வேறுபாட்டை சரி செய்யலாம்.

இன்று நிதிக் கட்டுப்பாடு காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.











# ஆஸி அபாரம்




நெதர்லாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்திரேலியா அபார வெற்றிபெற்றது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியா – நெதர்லாந்து அணிகள் மோதின.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி அந்த அணியின் டேவிட் வோர்னர், மார்ஷ் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.

மார்ஷ் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில், களமிறங்கிய ஸ்டீவ் ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்த டேவிட் வோர்னர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

பொறுப்புடன் ஆடிய ஸ்மித் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த லபுஷேன் 62 ஓட்டங்களுடனும், ஜோஷ் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஆனால், அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த டேவிட் வோர்னர், சதமடித்து (104) ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த மக்ஸ்வேல், நெதர்லாந்தின் பந்துவீச்சை பௌண்டரி, சிக்ஸர்களாகப் பறக்கவிட்டார். அவர் 40 பந்துகளில் சதம் விளாசினார். இறுதியில் 44 பந்துகளில் 106 ஓட்டங்கள் விளாசிய மக்ஸ்வெல் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் அவுஸ்திரேலியா அணி, 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 399 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் 400 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய நெதர்லாந்து அணி, 21 ஓவர்களில் 90 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இதனடிப்படையில் 309 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அபார வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலியா சார்பாக பந்துவீச்சில், ஆகக்கூடுதலாக மிச்செல் மார்ஷ் நான்கு விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

ஆட்டநாயகனாக அவுஸ்திரேலியாவின் மக்ஸ்வெல் தெரிவானார்.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இலங்கை – இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 5 | 5 | 0 | 0 | 0 | 10 | 1.353 |
| 02 | தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 2.370 |
| 03 | நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 1.481 |
| 04 | அவுஸ்திரேலியா | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | 1.142 |
| 05 | பாகிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.400 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.969 |
| 07 | இலங்கை | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.048 |
| 08 | இங்கிலாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.248 |
| 09 | பங்களாதேஷ் | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.253 |
| 10 | நெதர்லாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.922 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி